அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையவனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்
நீதி செலுத்துங்கள் அதுதான் பயபக்திக்கு மிக நெருக்கமானதாகும் - அல்குர்ஆன்

# * விசாரணை - தீர்வு மற்றும் தலாக் பற்றிய நெறி முறை *

காஜி அல்ஹாஜ் A.M.M. காதர் பக்ஷ் ஹுஸைன் ஸித்தீக்கி M.A.,
டவுன் காஜி , கீழக்கரை . இராமநாதபுரம் மாவட்டம் - தமிழ் நாடு.

சுற்றறிக்கை Ref:EDU/01-09 /03/29 - date 9/9/1429 , Sep. 9, 08

الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ , و الصَّلٰوةُ و السَّلَامُ عَلٰى سَيِّدِنَا مُحَمَّد و آلِهِ و صَحبِهِ اَجْمَعِين,

## 1. விசாரணை மற்றும் தீர்வு பற்றிய பொது அணுகு முறை

1. கணவன், மனைவியருக்கிடையில் பிரச்சினை எழுந்தால் அல்லது இருவரில் எவராவது ஜமாஅத் நிர்வாகத்திடம் புகார் செய்தால் சம்பந்தப்பட்ட இரு குடும்ப பொறுப்பாளர்களை அழைத்து தகவல் தெரிவிக்க வேண்டும்.

2. முதலில் சுமுக சமரச முயற்சி செய்ய வேண்டும் அதற்காக இரு குடும்ப பெரியவர் அல்லது பொறுப்பாளர்களை கொண்டும் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்

3. அல்லது மார்க்கப்பற்றுள்ள , அறிவார்ந்த அணுகு முறையுடன் செயலாற்றும் தகுதிவாய்ந்த நடுவர்களை( Arbitration Panel ) ஏற்படுத்தி விசாரனை செய்து தீர்வு கான முயற்சிக்க வேண்டும்

4. நடுவர் குழுவில் அவசியம் ஜமாஅத் தலைவர் ( அல்லது உப தலைவர் ), அல்லது செயலாளர் ( அல்லது உப செயலாளர் ) இடம் பெற வேண்டும்

5. நடுவர் குழுவில் இடம்பெறுபவர் பொது மக்களிடமிருந்தும் தகுதிவுடையவர்களை அணுகி நடுவர்களாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளலாம் , நடுவர் குழுவில் இடம்பெறுபவர் ஜமாஅத் கமிட்டி உறுப்பினராகத்தான் இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை

6. நடுவர் குழுவினரில் எவரும் (சம்பந்தப்பட்ட) விவகாரங்களில் தாங்கள் வாழ்வில் சிக்காதவர்களாக இருக்க வேண்டும்

   உதாரணமாக - விவாகரத்து பற்றி விசாரிக்கும் நடுவர் ஏற்கனவே தங்கள் மனைவியை விவாகரத்துச்செய்து அது *பிரச்னைக்குள்ளாக்கப்பட்டு* இருந்தால் அல்லது அதன் *பிரச்னை-நிலையில்* அவர் சிக்கி இருந்தால், நடுவர் குழுவில் இடம் பெற அவர் தகுதிவுடையவராகமாட்டார்.

7. தனிப்பட்ட விவகாரம் ( Private Matter ) குறித்து வரக்கூடிய மனு பற்றி விசாரித்து சமரசம் செய்யும் நிர்வாகியோ அல்லது நடுவரோ பிறரிடம் அதுபற்றி பேசாது இரகசியம் காத்திடப்பட வேண்டும்.

8. தனிப்பட்ட விவகார வழக்குகள் பொதுவாக பலர் அறியவேண்டிய அவசியம் இல்லை, சில வழக்குகள் சம்மந்தமில்லாதவர்கள் அறிவதன் மூலம் ஃபஸாது - ஃபித்னா ஏற்பட்டு விவகாரம் பெரிதாகிவிடும் என்பதை உணரவேண்டும்

9. விவாக மற்றும் குடும்ப சம்பந்தமான தனிப்பட்ட விவகார மனுக்களை தலைவர் / செயலாளர் பொறுப்பில் மஸ்ஜித் அலுவலகத்தில் தனி ( Confidential File ) கோப்பில் வைக்க வேண்டும். பொதுவாக அலுவலகம் வரக்கூடியவர்கள் மற்றும் மஸ்ஜித் ஊழியர்கள் உட்பட எவரும் அந்த மனுக்களை பார்வையிட வழிவகுக்காது வைக்க வேண்டும்

- காலதாமதத்துடன் ஏற்படும் விசாரணைகள் சில சமயங்களில் பிரச்சனைகளை அதிகப்படுத்திடக்கூடும் விவாக விலக்கு அறிவிப்பு போன்ற மனுக்கள் உடன் கவனிக்கத்தவறினால் அல்லது கிடப்பில் போடப்பட்டால் இஸ்லாமிய சட்டமுறைப்படி தலாக் சொன்னதால் ஏற்படும் இத்தா காலம் அனுஷ்டிக்கும் நிலை பற்றி கவனமில்லாத நிலைமை ஏற்ப்பட்டு விடக்கூடும் , அத்துடன் தலாக் நிகழ்தலும் ஆகிவிடக்கூடும்

- சில பொழுது உடன் விசாரணை செய்யாது தாமதப்படுத்திவிட்ட தலாக் விவகாரங்களினால் பின் சமரசத்திற்கு வழியில்லாத நிலை ஆகி*விடக்கூடும்* : காரணம் சில பொழுது ஜமாஅத்தில் கவனிக்காமல் இருக்கிறார்களே என கருதி *சம்மந்தப்பட்ட கணவன் மீண்டும் - மீண்டும் தலாக் கடிதம் எழுதி அல்லது சொல்லி விட்டால் சில பொழுது மூன்று தலாக்குகள் நிகழ்ந்து விடவும் கூடும்*

- தலாக் விவகாரங்களில் சமாதானப்படுத்தி சேர்த்துவிடும் சமயம், இஸ்லாமிய ஷரீஅத் சட்ட வரம்பு பற்றி முக்கிய கவனத்தில் கொள்ள வேண்டும்

10. சமரச தீர்வுகான முயற்சித்தல் அல்லது நன்மையான ஒரு முடிவுக்கு வழி ஏற்படுத்துதல் மக்களிடையே அமைதி உண்டாக்குதல் இவற்றிற்காக நாம் செலவிடும் நேரம் - உழைப்புக்கு அல்லாஹ்விடம் உரிய நற்பலன் கிடைக்கும் என்பதை இப்பணியில் ஈடுபடுபவர்கள் திடமாக உணரவேண்டும்

## 2. தலாக் விஷயத்தில் பின்பற்ற வேண்டிய நெறி முறை

1. தலாக் சொல்லி அல்லது எழுத்துப்பூர்வமாக எவரேனும் ஜமாஅத் நிர்வாகத்திற்க்கு தெரிவித்து இருந்தால் செயலாளர் சம்பந்தப்பட்ட பெண் வீட்டாருக்கு உடன் தகவல் தெரியப்படுத்த வேண்டும்

2. தபால் மூலம் ஒருவர் தலாக் சொல்லி கடிதம் மூலம் ஜமா அத்துக்கு எழுதி இருந்தால் அத் தபாலைப்பெற்றதும் உடன் சம்பந்தப்பட்ட நபர்ரைத்தொடர்பு கொண்டு அவரது "தபால்" தானா என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்

3. சம்பந்தப்பட்ட இரு குடும்ப பெரியவர் அல்லது பொறுப்பாளர்களை அழைத்து தகவல் தெரிவித்து ஆலோசனை செய்ய வேண்டும்

4. இத்தா காலம் முடியும் முன்பு சமரசம் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக கருதினால் ( முதல் அல்லது இரண்டாம் தலாக்காக இருந்தால் ) சமாதான முயற்சியை இரு சாரார் - குடும்ப பெரியவர் அல்லது பொறுப்பாளர் மற்றும் ஜமாஅத் நடுவர் குழு மூலம் மேற்கொள்ள வேண்டும்

5. தலாக் சொன்னவர் தலாக் தனது நிலையில் உறுதியாக இருந்து பின்னர் இத்தா காலமும் முடிந்து விட்டால் தலாக் நிகழ்ந்து விட்டதாகவே கருதப்படும்.

6. இத்தா காலத்திற்க்குப் பின்னர் இவ்வாறு தலாக் நிகழ்ந்த பின் நிக்காஹ் பதிவேட்டில் அவர்களது நிக்காஹ் - ரத்து (cancel ) செய்யப்பட்டு விட்டதாக எழுதிட வேண்டும்

7. இத்தா காலம் முடிந்த முதல் அல்லது இரண்டாம் தலாக்காக இருந்தால் சமரச முயற்சி மூலம் வாழ விரும்பினால் முறைப்படி சாட்சிகள், புதிய மஹர் தொகையுடன் புதிதாக நிக்காஹ் செய்து மீண்டும் அவர்களை வாழச்செய்யலாம்

8. *மூன்று தலாக் சொல்லப்பட்டு விட்டால் அவர் உடன் நிக்காஹ் செய்திட முடியாது அதன் சட்டம் தனி*

குறிப்பு :

- இத்தா காலத்தில் ( ﻧﻔﻘﻪ ) செலவுக்கு கொடுக்க வேண்டியது பற்றியும் அறிவுறுத்தவும்
- பிள்ளைகள் பரிபாலன விஷயத்தில் இஸ்லாமிய சட்ட நெறிப்படி தந்தை பொறுப்பேற்று நடந்து கொள்ள அறிவுறுத்தவும்
- பிள்ளையின் விஷயத்தில் பெற்றோர் உரிமைகளை மதித்து நடந்து கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட வேண்டும்.
- சம்பந்தப்பட்டவர் பெண் வீட்டாரிடம் கடன் , அமானிதம் போன்ற ஏதும் பெற்றிருந்தால்
  அதனை திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்
- அவசியம் ஏற்பட்டால் இரு சாரார் மத்தியில் ஓர் உடன்பாட்டை ஜமாத் நிர்வாகம் மூலம் ( நிர்வாகி / நடுவர் முன்னிலையில் ) ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்
- ஜமாஅத் முன்னிலையில் உடன்பாடு செய்துகொண்ட பின் அந்த உடன்பாட்டை பேணி நடந்துகொண்டு, ஜமாஅத் கட்டுப்பபாடு மற்றும் ஆலோசனைகளை மதித்து நடந்துகொள்ளுமாறும் அவர்களை வலியுறுத்த வேண்டும்

## 3. பஸ்கு فَسْخ விஷயத்தில் பின்பற்ற வேண்டிய நெறி முறை

பெண் தனது நிக்காஹை உரிய காரணத்துடன் ரத்து செய்ய கோருதல்

1. ஒரு பெண் இஸ்லாமிய முறைப்படி நிக்காஹை ரத்து செய்ய கோரினால் அதன் காரணம் விபரங்கள் குறிப்பிட்டாக வேண்டும் .

2. ஒரு பெண் தனது கணவருடன் தகுந்த காரணங்களுடன் வாழ மறுத்து தனது நிக்காஹை பஸக் செய்ய டவுன் காஜியிடம் கோரிக்கை விடுத்தால் , டவுன் காஜி அதனை சம்மந்தப்பட்ட மஹல்லா ஜமாஅத் நிர்வாகத்தின் கவனத்திற்க்கு அனுப்பி விசாரிக்குமாறு கேட்டுக்கொள்வார்

3. அல்லது ஜமாஅத் நிர்வாகத்திற்கு எழுத்துப்பூர்வமாக ஒரு பெண் இஸ்லாமிய முறைப்படி நிக்காஹை ரத்து செய்ய கோரினால் சம்பந்தப்பட்ட இரு குடும்ப பெரியவர்களை அல்லது பொறுப்பாளர்களை அழைத்து தகவல் தெரிவித்து ஆலோசனை செய்ய வேண்டும் , அத்துடன் சமரசத்திற்கான வழி வகை பற்றி ஆராய வேண்டும்.

4. பெண் குறிப்பிடும் காரணங்கள் சரியானதாக உள்ளதா என்பதை பெண்ணின் பொறுப்புடைய நெருங்கிய உறவினர்கள் மூலம் தெளிவான , உண்மை நிலையை விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும்.

5. அதன் பின் அதன் தகவலை கணவருக்கு தெரிவிக்க வேண்டும்.

6. சமரசத்திற்கான வழி இன்றி பெண் தனது நிலையில் உறுதியாக இருந்தால் அதனை பஸ்கு செய்ய டவுன் காஜியாருக்கு அந்த மனுவை அனுப்ப வேண்டும்

7. டவுன் காஜி அதை பரிசீலித்து ஷரீஅத் நியதிபடி ஒப்புதல் வழங்குவார்.

8. பஸ்கு செய்த பின் இத்தா காலத்திற்க்குப் பின்னர் நிக்காஹ் பதிவேட்டில் அவர்களது நிக்காஹ் - ரத்து (cancel ) செய்யப்பட்டு விட்டதாக எழுதிட வேண்டும்

# * விசாரணை - தீர்வு மற்றும் தலாக் பற்றிய நெறி முறை *

காஜி அல்ஹாஜ் A.M.M. காதர் பக்ஷ் ஹுஸைன் ஸித்தீக்கி M.A.,
டவுன் காஜி , கீழக்கரை . இராமநாதபுரம் மாவட்டம் - தமிழ் நாடு.

சுற்றறிக்கை Ref:EDU/01-09 /03/29 - date 9/9/1429 , Sep. 9, 08

## 4. தலாக் طلاق இத்தா கால விளக்கம்

1. மூன்று துப்புரவுகளுக்குப்பின் இத்தாமுடிவடையும்

2. துப்புரவு ( Period of purification after menstruation ) காலதில் தலாக் சொல்லிய பின் அவளுக்கு ஹைழு ( மாதவிடாய் - menstruation) ஏற்பட்டுவிட்டால் ஒரு துப்புரவு முடிந்துவிட்டது அடுத்து இன்னும் இரு துப்புரவுகளுக்குப்பின் அவளுடைய இத்தா நிறைவடையும்

3. ஹைழுடைய காலத்தில் தலாக் சொன்னால் பிறகு மூன்று துப்புரவு ஏற்பட்டு நான்காவது ஹைழுடைய நேரத்தில் தான் இத்தா முடிவடையும்

4. இத்தா விதியானவர் கர்ப்பவதியாக இருந்தால் பிள்ளை பிரசவித்த பின் இத்தா முடிவடையும்

5. மாதவிடாய் நின்றுவிட்டவர்கள் - மூன்று மாத காலம் இத்தா இருக்கவேண்டும்

6. *குறிப்பு : கணவன் இறந்ததை முன்னிட்டு ஏற்படும் இத்தா காலம் நான்கு மாதம் பத்து நாள் ஆகும்*

வல்ல அல்லாஹ் நம் யாவரையும் சத்திய இஸ்லாமிய சட்ட நெறிப்படி வாழ அருள்பாலிப்பானாக

<u>சுற்றறிக்கை அனுப்பப்பட்ட ஜமாஅத்கள்</u>

1. நடுத்தெரு ஜும் ஆ பள்ளி ஜமாஅத் , கீழக்கரை
2. பழைய குத்பா பள்ளி ஜமா அத் கீழக்கரை
3. கடற்கரை பள்ளி ஜமாஅத் , கீழக்கரை
4. மின்ஹாஜியார் பள்ளி ஜமாஅத் , கீழக்கரை
5. உஸ்வத்துன் ஹசனா முஸ்லிம் சங்கம் , கீழக்கரை
6. தெற்குத்தெரு பள்ளி ஜமாஅத் , கீழக்கரை
7. வடக்குத்தெரு பள்ளி ஜமாஅத், கீழக்கரை
8. கிழக்குத்தெரு பள்ளி ஜமாஅத் , கீழக்கரை

& கீழக்கரை அனைத்து ஜமாஅத் கூட்டமைப்பு ( குத்பா கமிட்டி ) , கீழக்கரை

வல்ல அல்லாஹ் நம் யாவரையும் சத்திய இஸ்லாமிய சட்ட நெறிப்படி வாழ அருள்பாலிப்பானாக

டவுன் காஜி - கீழக்கரை